DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | மாணிக்கம் |
| Father's Name | முனிசாமி கவுண்டர் |
| Village | தும்பேரி |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | கூலி |
| Age | 66 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **11.07.2025**

O.S.No. 06/2019 பி.வா.சா.1

<u>குறுக்கு விசாரணை (3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்)–</u>

**1.** என் தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். என் தகப்பனாரின் முதல் மனைவியின் மகன் 3ம் பிரதிவாதியாகிய சாமு என்றால் சரிதான். என் தகப்பனாரின் இரண்டாவது மனைவியின் வாரிசுகள் வாதிகள் மற்றும் 1, 2ம் பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

2. எங்களுக்குள் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் தும்பேரி கிராம சர்வே எண்.217/4–ல் 55 செண்ட் நிலம் 3ம் பிரதிவாதிக்கும், சர்வே எண்.163/5ஏ1–ல் 1 ஏக்கர் 20 செண்ட் நிலம் எங்கள் தாயார், வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்ட காலத்தில் இருந்து 3ம் பிரதிவாதி தனியாகவும், நாங்கள் தனியாகவும் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். 28.11.1994–ல் சர்வே எண்.163/5ஏ–ல் 36 செண்ட் நிலமும் மற்றும் கிணறு மற்றும் பம்ப் செட் 6–ல் 1 பங்கு 3ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. எனது தாயார் இறந்த பிறகு வாய்மொழியாக எனது சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுகம் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல, நான் மற்றும் 1ம் பிரதிவாதி மட்டும் தான் பாகப்பிரிவினை செய்துக்கொண்டோம். மேற்படி பாகப்பிரிவினை செய்யப்பட்டு சுமார் 37 அல்லது 38 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான்.

5. 21.02.1995–ல் 1ம் பிரிதிவாதி 3ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.163/5ஏ–ல் 32 செண்ட் நிலமும் மற்றும் கிணறு மற்றும் பம்ப் செட் 6–ல் 1 பங்கை கிரையம் கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 2 கிரையப்பத்திரத்திலும் பாகப்பிரிவினை பற்றி கூறப்பட்டு இருக்கிறது என்றால் சரியல்ல.

6. 16.09.1998–ல் நானும் 3ம் பிரதிவாதியும் சொத்துக்களில் பதிவு செய்யப்பட்ட பரிவர்த்தனை பத்திரம் செய்துக்கொண்டோம் என்றால் அது அராஜகமாக விருப்பம் இல்லாமல் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி பத்திரத்தை ரத்து செய்வதற்கு எந்த வித நடவடிக்கையும் இன்றுவரை எடுக்கவில்லை என்றால் சரிதான், ஏனென்றால் பஞ்சாயத் பேசி அப்படி எதுவும் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதானல் நடவடிக்கை எடுக்கவில்லை.

7. 35 ஆண்டுகளுக்கு முன்னரே கூட்டுக்குடும்ப சொத்து பாகம் ஏற்பட்டுவிட்டது என்றாலும், 3ம் பிரதிவாதி கூட்டுக்குடும்ப உறுப்பினர் இல்லை என்றாலும் எனது சகோதரிக்கு நாங்கள் தான் பாகம் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

*ESHWAR VISWANATHAN*

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Date: 2025.07.31 17:27:57 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாணியம்பாடி.**